# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 02–ஆம் நாள், சனிக்கிழமை

**<u>I.A. No. 01 of 2024 in O.S. No. 403 of 2013</u>**
**<u>(CNR No. TNSA13-000282-2013)</u>**

செல்வகுமார் .. மனுதாரர் / பிரதிவாதி

எதிராக

பொன்னுசாமி .. எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 16.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ராமசாமி அவர்களும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவராஜன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

மனுதாரர் / பிரதிவாதியை கடந்த 21.12.2022 அன்று தோன்றா தரப்பினராக அறிவித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யவேண்டி மனுதாரர் / பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

*.. 2 ...*

2. **<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கை மனுதாரர் / பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / பிரதிவாதியின் வழக்கறிஞர் திரு. K. சேகர் அவர்கள் இறந்துவிட்டதால் அசல் வழக்கு குறித்த விவரம் எதுவும் மனுதாரர் / பிரதிவாதிக்கு கிடைக்கப்பெறவில்லை. தற்பொழுது வழக்கறிஞர் ஆணையரான திரு. E. மணிகண்டன் என்பவரிடமிருந்து மனுதாரர் / பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு கிடைக்கப்பெற்றது. அப்பொழுதுதான் அசல் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் குறித்து மனுதாரர் / பிரதிவாதிக்கு தெரியவந்தது. பின்னர் மனுதாரர் / பிரதிவாதி அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு குறித்து கேட்டபொழுது, கடந்த 21.12.2022 அன்று மனுதாரர் / பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி வாய்தா போடப்பட்டிருந்தாகவும், மேற்படி தேதியில் மனுதாரர் / பிரதிவாதி ஆஜராகாததால் அவரை தோன்றா தரப்பினராக அறிவித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி வாய்தா தேதியில் மனுதாரர் / பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாதது வேண்டுமென்றே செய்த செயல் அல்ல. எனவே, கடந்த 21.12.2022 அன்று மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டியும், வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கவும் மனுதாரர் / பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் / வாதி மறுத்துள்ளார். மேலும், இந்த வழக்கில் மனுதாரர் / பிரதிவாதியின் வழக்கறிஞர் காலமாகிவிட்டதால், மனுதாரர் / பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு கடந்த 21.12.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளதாக

.. 3 ...

மனுதாரர் / பிரதிவாதிக்கு நீதிமன்றம் மூலம் சட்டப்படி ஒரு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட மனுதாரர் / பிரதிவாதி கடந்த 21.12.2022 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. மேற்படி சங்கதியை மனுதாரர் / பிரதிவாதி மறைத்து, ஆணையர் கடந்த 10.02.2024 அன்று தாவா சொத்தை பார்வையிட உள்ளதாக தெரிவித்து அறிவிப்பு அனுப்பியபொழுதுதான் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் குறித்து மனுதாரர் / பிரதிவாதிக்கு தெரியவந்ததாக கூறியுள்ளது முற்றிலும் தவறு. எனவே, இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் / பிரதிவாதி தவறான தகவலை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் / பிரதிவாதியை கடந்த 08.02.2023 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு போடப்பட்டிருந்ததாக கூறியுள்ளது முற்றிலும் தவறு. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர் / பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) இவ்வழக்கை எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்கு

.. 4 ...

நிலுவையில் இருக்கும்பொழுது மனுதாரர் / பிரதிவாதியின் வழக்கறிஞர் இறந்துவிட்ட காரணத்தால் நீதிமன்றம் மூலம் மனுதாரர் / பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட மனுதாரர் / பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் தோன்றா தரப்பினராக அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஆராய்ந்து பார்க்கையில், மனுதாரர் / பிரதிவாதிக்கு இவ்வழக்கை தொடர்ந்து நடத்த வாய்ப்பளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவானது கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2) மனுதாரர் / பிரதிவாதி, எதிர்மனுதாரர் / வாதிக்கு செலவுத்தொகையாக ரூ.1,000/–ஐ 25.08.2025–ற்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

7. முடிவாக, மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 02–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.08.02 18:21:49 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 5 ...*

**<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>நீதிமன்ற சாட்சிகள் </u>:** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.08.02 18:22:02 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 01/2024**

**----------------**

**அ.வ. எண் 403/2013**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 02.08.2025